மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண்.107/2013

பெயர் : என்.ரவிக்குமார்
சாட்சி – பி.வா.சா–1 நாள்: 13.06.2025

---

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி ( வாதிகள் தரப்பு)**

1) பி.வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் யார் பெயரில் வாங்கப்பட்டுள்ளது என்றால் ஆங்கிலத்தில் எழுதியுள்ளது ஆங்கிலம் எனக்கு எழுத படிக்க தெரியாது. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள சொத்திற்கான பதிவு அலுவலகம் எதுவென்றால் சூலூர் சார் பதிவாளர் அலுவலகம் ஆகும். சூலூர் சார் பதிவாளர் அலுவலகம் அருகிலேயே ஏராளமான முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். பொதுவாக ஒரு சொத்தை விற்பவர் அல்லது வாங்குபவர் பெயரில் தான் முத்திரைத்தாள்கள் வாங்குவது வழக்கம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.1 ஆவணத்திற்கு சம்பந்தமில்லாத நபர் பெயரில் முத்திரைத்தாள் வாங்கப்பட்டதாக எழுதப்பட்டுள்ளது என்றால் எனது அப்பாவிற்கு தான் தெரியும்.

2) பி.வா.சா.ஆ.1 ஆவணம் எங்கு வைத்து லேமினேஷன் செய்யப்பட்டது என்றால் எனது அப்பாவிற்கு தான் தெரியும். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சி கையெழுத்து போட்டுள்ள இருவரையும் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது எனது அப்பா சொல்லி உள்ளார். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சி கையெழுத்து போட்டுள்ள நபர்களின் தந்தை பெயர் விலாசம் ஆகியவை எதுவும் எழுதப்படவில்லை என்றால் சரிதான். முத்திரைத்தாளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவராஜ் என்ற நபர் யார் என்று எங்கள் குடும்பத்திற்கு தெரியாது என்றால் எங்களுக்கு தெரியாது எனது அப்பாவிற்கு தான் தெரியும்.

3) முத்திரைத்தாளில் எம். ஆர். குட்டி முத்திரைத்தாள் விற்பனையாளர் கோயம்புத்தூர் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி முத்திரைத்தாள் விற்பனையாளர் அலுவலகம் தற்போது உள்ளதா என்று வழக்கிற்கு பின்னர் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் நான் விசாரிக்கவில்லை எனது அப்பா விசாரித்தாரா என்று தெரியவில்லை. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் சொத்து விவரத்தில் சி. மாரப்ப கவுண்டர் பூமி பொளிக்கும் கிழக்கு என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அம்மாவாசை கவுண்டர் பூமிக்கும் மேற்கு என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மேற்படி சி. மாரப்ப கவுண்டர் மற்றும் அம்மாவாசை கவுண்டர் ஆகியோர் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெரிய மரப்ப கவுண்டரின் உடன்பிறந்த சகோதரர் என்றால் சரியல்ல.

4) எனது பாட்டியின் பெயர் மாறாத்தாள் ஆகும். எனது பாட்டி மாறாத்தாள் பெரிய மரப்ப கவுண்டர், கணபதி கவுண்டர், சி. மாரப்ப கவுண்டர் மற்றும் அம்மாவாசை கவுண்டர் ஆகியோர்களது உடன் பிறந்த சகோதரி என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சென்ற முறை நீதிமன்றத்தில் குறுக்கு விசாரணைக்கு சாட்சிகளுக்கு சென்ற பின்னர் எனது உறவினர்கள் யார் என்பது பற்றிய விவரங்களை கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சி கையெழுத்து போட்டுள்ள மாரப்ப கவுண்டர் யார் என்று எங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர் பள்ளபாளையத்தை சேர்ந்தவர் கொரோனாவின் போது தற்போது இறந்து விட்டார். மேற்படி மாரப்ப கவுண்டரின் தந்தை பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

5 ) மேற்படி மரப்ப கவுண்டர் பள்ளபாளையத்தை சேர்ந்தவர் என்று எப்போது விசாரித்து தெரிந்து கொண்டேன் என்றால் சுமார் 4, 5 ஆண்டுகளுக்கு முன்பு தெரிந்து கொண்டேன். மேற்ப்படி மாரப்ப கவுண்டர் யார் என்று அப்பா பெயர் தெரியாமல் எவ்வாறு விசாரித்து தெரிந்துகொண்டேன் என்றால் பேர் கேட்டதும் சொன்னார்கள். அவரது குடும்பத்தின் வம்சாவளிகள் தற்போதும் உள்ளார்களா என்றால் உள்ளார்கள். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள சாட்சி கையெழுத்துக்கள் இரண்டும் ஒரே நபரால் போடப்பட்டது என்றால் சரியல்ல.

6) வா.சா.ஆ.7 கிரைய பத்திரத்தின் மூலம் எனது அப்பா நடராஜன், சித்தப்பா கிட்டுச்சாமி மற்றும் எனது பாட்டி மாறாத்தாள் ஆகியோர் ஒரு சின்ன கவுண்டர் மகன் தங்கவேல்சாமி என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். சொத்து விவரத்தில் பாட்டை கவுண்டர் பூமிக்கும் வடக்கு, தென் வடல் இட்டேரிக்கும் கிழக்கு, கிழமேல் இட்டேரிக்கும் தெற்கு, பெரிய மாரப்ப கவுண்டர் பங்குக்கும் மேற்கு, இதன் மத்தியில் பு.ஏ.0.78 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7) வா.சா.ஆ.7 கிரைய பத்திரத்திற்கு மூல பத்திரம் எது என்றால் எனக்கு நினைவில் இல்லை. ( வாதிகள் தரப்பு வழக்கறிஞர் இந்த வழக்கில் தன்னை தரப்பினராக சேர்த்த பின்னர் வாதிகள் தரப்பு ஆவணங்கள் பற்றிய விவரங்களை கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் என்ற கேள்விக்கு எனக்கு நினைவில் இல்லை என்று பதில் அளிக்கிறார். குறுக்கு விசாரணையின் போது எந்த கேள்வி கேட்டாலும்

எனக்கு தெரியாது எனது அப்பாவிடம் தான் கேட்க வேண்டும் எனது அப்பாவிற்கு தான் தெரியும் என்றும் தெரிவிக்கின்றார்).

8) 1960 ஆம் ஆண்டு வா.சா.ஆ.6 ஆவணம் மூலம் எனது தாத்தா கருப்ப கவுண்டர் மகன் மாரப்ப கவுண்டர் கிரயம் வாங்கி அவர் இறந்த பின்னர் எனது அப்பா, எனது சித்தப்பா மற்றும் பாட்டிய ஆகியோர் இணைந்து வா.சா.ஆ.7 கிரைய பத்திரத்தின் மூலம் தங்கவேல்சாமி என்பவருக்கு கிரையம் கொடுத்த விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றும், அந்த ஆவணத்திலேயே பெரிய மரப்ப கவுண்டர் பங்கு பூமிக்கும் மேற்கு என்று தெளிவாக கண்டு எழுதப்பட்டுள்ள விவரமும் எனக்கு தெரியும் என்றும், அதனை ஒப்புக் கொண்டால் எங்களுக்கு பாதகமாக வரும் என்பதால் நான் தெரியாது என்றும் நினைவில் இல்லை என்றும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

9) பி.வா.சா.ஆ.1 ஆவணம் வழக்கிற்கு பின்னிட்டு தயார் செய்யப்பட்டதால் தான் சொத்து விவரத்தில் எங்கள் பூமிக்கும் மேற்கு என்று குறிப்பிடாமல் அவசர கதியில் சொத்து விவரத்தில் பெரிய மாரப்ப கவுண்டர் பூமிக்கும் மேற்கு என்று உண்மையை குறிப்பிட்டு எழுதி உள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 கிரைய பத்திரத்தின் மூலம் பி.வா.சா.ஆ.1 ஆவணம் வழக்கிற்கு பின்னிட்டு எங்களால் போலியாக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்பதை நிரூபணம் செய்கிறது என்றால் சரியல்ல.

10) வழக்கில் வாதிகள் என்ன பரிகாரம் கேட்டுள்ளார்கள் என்றால் எங்களிடம் பங்கு கேட்டு தாக்கல் செய்துள்ளார்கள். எவ்வளவு பங்கு வேண்டும் என்று கேட்டுள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. நான் என்ன வழக்கு என்று தெரியாமலேயே எனது அப்பா தாக்கல் செய்த எதிர்வழக்குரைக்கு சாட்சியம் அழைக்கிறேன் என்றால் சரியல்ல. பட்டாவில் எங்களது பெயர் எப்போது சேர்க்கப்பட்டது என்று எனக்கு நினைவில் இல்லை. சொத்திற்கான பட்டா எண் சாமளாபுரம் கிராமத்தில் என்ன என்றால் 1524 ஆகும்.

11) வா.சா.ஆ.11 பட்டா எண் 1146 யார் பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால் செங்கத்துறை காரர் என்ற பெயரில் வழங்கப்பட்டுள்ளது. சாமளாபுரம் கிராமம் க.ச.எண் .89/2 பட்டா எண்.1146 ல் எங்களது பெயரை சேர்த்து நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்து உள்ளோமா என்றால் எனக்கு நினைவில் இல்லை. சாமளாபுரம் கிராமம் க.ச.எண் .89/2 பட்டா எண்.1146 ல் எங்களது பெயரை சேர்த்து நீதிமன்றத்தில் பி.வா.சா.ஆ.5 தாக்கல் செய்துள்ளோமா என்றால் எனக்கு நினைவில் இ்ல்லை. ( சாட்சி ஆவணத்தை வாங்கி பார்த்துவிட்டு தான் தாக்கல் செய்த ஆவணத்தையே தனக்கு நினைவில் இல்லை என்று சொல்கிறார்).

12) செங்கத்துறைக்காரர் என்று எங்கள் குடும்பத்தில் யாரும் கிடையாது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 ஆவணம் பி.வா.சா.ஆ.1 ஆவணத்திற்கு உயிர் கொடுப்பதற்காக சட்ட முரணாக எங்களால் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதன் காரணமாகத்தான் நான் தெரியாது நினைவில் இல்லை அப்பாவிடம் தான் கேட்க வேண்டும் என்று மழுப்பலாக பதில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சாமளாபுரம் கிராமம் க.ச.எண் .89/3 பட்டா எண் 1524 பட்டாவில் எனது தாத்தாவின் பெயர் நீக்காமல் இருந்ததை சாதகமாக்கி அவர் சொத்தை விட்ட பின்னரும் எங்களது பெயரை சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல.

13) பி.வா.சா.ஆ.6 வரி ரசீது ஆவணம் 1991 ஆண்டில் இருந்து 2000 ம் ஆண்டு வரை ஒரே இணமாக ஒரே ரசீது எங்கள் செல்வாக்கை பயன்படுத்தி கட்டியுள்ளோம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 8 வரி ரசீது ஆவணம் 2004 ஆண்டில் இருந்து 2007 ம் ஆண்டு வரை ஒரே இணமாக ஒரே ரசீது எங்கள் செல்வாக்கை பயன்படுத்தி கட்டியுள்ளோம் என்றால் சரியல்ல. சட்டப்படி வருவித்து இருந்தால் நான் காலதாமதத்திற்கு தண்டத்திருவையுடன் சேர்த்து தான் செலுத்தி இருக்க முடியும் என்றால் சரியல்ல.

வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க வாதி தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.06.13 18:20:39 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.